# தமிழ் இலக்கியம்

## சங்க காலம்

1. சங்கம் மூன்று வகைப்படும் - அவை முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம்
2. முதற்சங்கம் அமைந்திருந்த இடம் - தென்மதுரை
3. முதற்சங்கத்தைத் தோற்றுவித்தவர் - காய்சினவழுதி என்னும் பாண்டியன்
4. முதற்சங்கத்தை ஆதரித்த அரசர்கள் - காய்சினவழுதி முதல் கடுங்கோன் வரை 89 பேர்
5. முதற்சங்கம் நிலைத்திருந்த ஆண்டுகள் - 4449
6. முதற்சங்கத்தில் தமிழாய்ந்த புலவர்கள் - 4449
7. முதற்சங்கத்தில் தோன்றிய நூல்கள் - அகத்தியம், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை, பெரும்பரிபாடல்
8. முதற்சங்கத்தில் வீற்றிருந்த முதன்மையான புலவர்கள் - அகத்தியர், சிவபெருமான்,முருகவேள், முரஞ்சியூர் முடிநாகராயர், நிதியின் கிழவர் முதலிய 549 பேர்
9. சங்கம் பற்றிய குறிப்பு முதன் முதலில் எச்சான்று மூலம் கிடைக்கின்றது - கி.பி. 7ம் நூற்றாண்டு, திருநாவுக்கரசரின் தேவாரத்தில் 'நன்பாட்டுப் புலவனாயச் சங்கம் ஏறி" என்னும் வரி மூலம்
10. இடைச்சங்கம் அமைந்திருந்த இடம் - கபாடபுரம்
11. இடைச்சங்கத்தை நிறுவியவர் பெயர் - வெண்டர்செழியன்
12. இடைச்சங்கத்தை காத்த அரசர்கள் - வெண்டர்ச்செழியன் முதல் முடத்திருமாறன் வரை உள்ள 59 பேர்
13. இடைச்சங்கம் நிலைத்திருந்த ஆண்டுகள் - 3700 ஆண்டுகள்
14. இடைச்சங்கத்தில் தமிழாய்ந்த புலவர்கள் - 3700 பேர்
15. இடைச்சங்கத்தில் தோன்றிய நூல்கள் யாவை- பெருங்கலி, பெருங்குருகு, வெண்டாளி, வியாழ மாலை, அகத்தியம், தொல்காப்பியம், மாபுராணம், பூதபுராணம் ,இசை நுணுக்கம்.
16. இடைச்சங்கத்தில் வீற்றிருந்த சிறப்புப் புலவர்கள் - அகத்தியர், தொல்காப்பியர், மோசி, வெள்;ர்க்காப்பியனார், சிறுபாண்டரங்கன், திரையன்மாறன், கீரந்தை முதலிய 59 பேர்
17. இடைச்சங்கம் மறைந்தது எப்படி - கடற்கோளுக்குச் சங்கமும், கபாடபுரமும் இரையாயிற்று
18. கடைச்சங்கம் அமைத்திருந்த இடம் -தற்போதைய மதுரை (வடமதுரை)
19. கடைச்சங்கத்தை நிறுவியவர் - முடத்திருமாறன்
20. கடைச்சங்கத்தை காத்த அரசர்கள் - முடத்திருமாறன் முதல் உக்கிரப்பெருவழுதி வரை 49 பேர்
21. கடைச்சங்கம் நிலைத்திருந்த ஆண்டுகள் - 1850 ஆண்டுகள்
22. கடைச்சங்கத்தில் தமிழாய்ந்த புலவர்கள் - 449 பேர்
23. கடைச்சங்கத்தில் பாடப்பட்ட நூல்கள் - எட்டுத்தொகை, பத்துப்பாட்டு
24. கடைச்சங்கத்தில் இருந்த முதன்மைபுலவர்கள் - சிறுமேதாவியார், சேந்தம் பூதனார், பெருங்குன்றூர் கிழார், இளந்திருமாறன், நல்லந்துவனார், மருதனிளநாகனார், நக்கீரனார் முதலிய 49 பேர்
25. தற்போதைய தமிழ்ச்சங்கத்தைத் தோற்றுவித்தவர் - பாண்டியத்துரைதேவர்
26. தற்போதைய தமிழ்ச்சங்கம் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு - 14.09.1901
27. சங்கங்களைப்பற்றி முழுமையாகக் கூறும் நூல் - இறையனார் களவியலுரை
28. முச்சங்கங்களிலும் அரங்கேறியதாகக் கூறப்படும் நூல் - அகத்தியம்
29. தொல்காப்பியத்தில் எத்தனை நூற்பாக்கள் - 1610
30. சேரமன்னனின் தலைநகர் - வஞ்சி
31. சேரமன்னனின் துறைமுகம் - முசிறி
32. சேரனின் மாலை - பனம்பூ மாலை
33. சேரனின் கொடி, குலம் - வில்கொடி, அக்கினி குலம்
34. சேரனைக் குறிக்கும் வேறுபெயர்கள் - உதியன், பொறையன், வானவன், குட்டுவன்,குடநாடன், பூழியன் கோதை,மலையமான், வானவரம்பன், வில்லவன், கேரளன்

35. சோழனின் தலைநகர், துறைமுகம் - காவிரிப்பூம்பட்டினம், உறையூர்
36. சோழனின் பூமாலை, கொடி, குலம் - ஆர்மாலை (அத்திப்பூ), புலிக்கொடி, சூரியகுலம்
37. சோழனைக் குறிக்கும் வேறுபெயர்கள் - சென்னி, வளவன், கிள்ளி, செம்பியன், புனல்நாடன், கோழிவேந்தன், நேரியன், அபயன்
38. பாண்டியனின் தலைநகர், துறைமுகம் - மதுரை, கொற்கை
39. பாண்டியனின் மாலை, கொடி, குலம் - வேப்பம்பூமலை(வேம்பு), மீன்கொடி, சந்திரகுலம்
40. பாண்டியனைக் குறிக்கும் வேறுபெயர்கள் - மாறன், செழியன், வழுதி, மீனவன், தென்னவன், பஞ்சவன், கௌரியன், தமிழ்நாடன், கைதவன், பொதியப்பொற்பன், வையைத்துறைவன், குமரிச்சேர்ப்பன்
41. தொல்காப்பியத்தில் உள்ள அதிகாரங்கள், இயல்கள் - 3 அதிகாரம், 27 இயல்கள்
42. தொல்காப்பியம் எழுத்த அதிகாரத்தில் உள்ள இயல்களின் பெயர்கள் - நூன்மரபு, மொழிமரபு, பிறப்பியல்,புணரியல், தொகை மரபு, உருபியல், உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப்புணரியல்
43. தொல்காப்பியம் சொல்லதிகாரத்தில் உள்ள இயல்களின் பெயர்கள் - கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு, பெயரியல், வினையியல், இடையியல், உயிரியல், எச்சவியல்
44. தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் உள்ள இயல்களின் பெயர்கள் - அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல்
45. தொல்காப்பியம் குறிப்பிடும் மெய்ப்பாடுகளின் பெயர்கள் - நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை
46. தொல்காப்பியம் முழுமைக்கும் உரை எழுதியவர் - இளம்பூரணர்
47. தொல்காப்பிய எழுத்திகாரத்திற்குச் சிறந்த உரை எழுதியவர் - இளம்பூரணர்
48. தொல்காப்பிய சொல்லதிகாரத்திற்குச் சிறந்த உரை எழுதியவர் - சேனாவரையர்
49. எட்டுத்தொகை நூல்கள் - நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை,அகநானூறு, புறநானூறு
50. எட்டுதொகை நூல்களில் அகப்பொருள் நூல்கள் - நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, கலித்தொகை
51. எட்டுத்தொகை நூல்களில் புறப்பொருள் நூல்கள் - பதிற்றுப்பத்து, புறநானூறு
52. எட்டுத்தொகை நூல்களில் அகபுறப்பொருள் நூல் - பரிபாடல்
53. நற்றிணையைப் பாடிய புலவர்கள் - 275பேர்
54. நற்றிணையில் அமைந்துள்ள பாடல்கள் - 400
55. நற்றிணையின் அடி வரையறை - 9 - 12 அடிகள்
56. நற்றிணையைத் தொகுப்பித்தவர் - பன்னாடு தந்த மாறன் வழுதி
57. நற்றிணைக்குக் கடவுள் வாழ்த்துப் பாடியவர் - பாரதம் பாடிய பெருந்தேவனார்
58. நற்றிணையில் பாடப்படும் கடவுள் - திருமால்
59. குறுந்தொகையைப்பாடிய புலவர்கள் - 250 பேர்
60. குறுந்தொகையில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை - 400
61. குறுந்தொகையில் அடிவரையறை - 4- 8 அடிகள்
62. குறுந்தொகையைத் தொகுத்தவர் - பூரிக்கோ
63. குறுந்தொகைக்கு கடவுள் வாழ்த்து பாடியவர் - பாரதம் பாடிய பெருந்தேவனார்
64. குறுந்தொகையில் பாடப்படும் கடவுள் - முருகன்
65. ஐங்குறுநூற்றைப் பாடிய புலவர்கள் - 5 பேர்
66. ஐங்குறுநூற்றிலுள்ள பாடல்கள் - 500
67. ஐங்குறுநூறு பாடல்களின் அடிவரையறை - 3 - 5 அடிகள்
68. ஐங்குறுநூற்றைத் தொகுப்பித்தவர் - யானைகட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை

69. ஐங்குறுநூற்றுக்கு கடவுள் வாழ்த்துப்பாடியவர் - பாரதம் பாடிய பெருந்தேவனார்
70. ஐங்குறுநூற்றில் பாடப்படும் கடவுள் - சிவன்
71. கலித்தொகையைப் பாடிய புலவர்கள் - 5 பேர்
72. கலித்தொகையில் அமைந்துள்ள பாடல்கள் - 150
73. கலித்தொகைப்பாடல்கள் எந்த பாவினால் பாடப்பட்டுள்ளது - கலிப்பா
74. கலித்தொகைத்தொகையைத் தொகுத்தவர் - நல்லந்துவனார்
75. கலித்தொகைக்கு கடவுள் வாழ்த்துப் பாடியவர் - நல்லந்துவனார்
76. கலித்தொகையில் பாடப்படும் கடவுள் - சிவன்
77. குறிச்சிக்கலியைப் பாடியவர் - கபிலர்
78. குறிஞ்சிக்கலியில் அமைந்துள்ள பாடல்கள் - 29
79. முல்லைக்கலியின் ஆசிரியர் - சோழன் நல்லுருத்திரன்
80. முல்லைக்கலியின் பாடல்களின் எண்ணிக்கை - 17
81. மருதக்கலி பாடியவர் - மருதனிளநாகனார்
82. மருதக்கலி பாடல்களின் எண்ணிக்கை - 35
83. நெய்தற்கலி பாடியவர் - நல்லந்துவனார்
84. நெய்தற்கலியின் பாடல்கள் - 33
85. பாலைக்கலியின் ஆசிரியர் - பெருங்கடுங்கோன்
86. பாலைக்கலியின் பாடல்கள் - 35
87. அகநானூறு பாடிய புலவர்கள் - 145
88. அகநானூற்றின் அடிவரையறை - 13 -31 வரை
89. அகநானூற்றைத் தொகுத்தவர் - உருத்திரசன்மன்
90. அகநானூற்றைத் தொகுப்பித்தவர் - பாண்டியன் உக்கிரபெருவழுதி
91. அகநானூற்றுக் கடவுள் வாழ்த்துப் பாடியவர் - பாரதம் பாடிய பெருந்தேவனார்
92. அகநானூற்றில் பாடப்படும் கடவுள் - சிவன்
93. அகநானூற்றின் மறுபெயர் - நெடுந்தொகை
94. அகநானூற்று பாடல்களின் பிரிவு - 1. களிற்றுயானைநிரை, 2. மணிமிடைப்பவளம், 3. நித்திலக்கோவை
95. களிற்றியானை நிரையில் உள்ள பாடல்கள் - 1 முதல் 120 பாடல்கள்
96. மணிமிடைப்பவளத்தில் உள்ள பாடல்கள் - 121 முதல் 300 வரை
97. நித்திலக்கோவையில் உள்ள பாடல்கள் - 301 முதல் 400 வரை
98. அகநானூற்றில் ஒற்றை எண்ணால் அமைந்த பாடல்கள் - பாலைத்திணைக்கு உரியவை
99. அகநானூற்றில் முல்லைத்திணைக்குரிய பாடல்கள் - 4, 14, 24 என்ற எண்களால் அமைந்துள்ளன
100. அகநானூற்றில் 6, 16, 36 என்ற எண்களால் அமைந்துள்ள பாடல்கள் - மருதத்திணைக்கு உரியவை
101. அகநானூற்றில் 2, 8 என இரண்டையும் எட்டையும் இறுதியாகக் கொண்ட பாடல்கள் குறிப்பிடும் திணை - குறிஞ்சித்திணை
102. அகநானூற்றில் பத்தோடு எண் முடிவனவற்றை - நெய்தல் திணையாக அமைத்துள்ளனர்
103. பதிற்றுபத்து பாடிய புலவர்கள் - 10 பேர்
104. பதிற்றுபத்தில் உள்ள மொத்தப்பாடல்கள் - 100
105. பதிற்றுபத்தில் கிடைத்துள்ள பாடல்கள் - 80
106. பதிற்றுபத்தின் அடிவரையறை - 8 -57
107. பதிற்றுபத்திற்கு கடவுள் வாழ்த்துப் பாடியவர்- பாரதம் பாடிய பெருந்தேவனார்
108. பதிற்றுபத்தில் பாடப்படும் கடவுள் - சிவன்
109. பதிற்றுபத்து - சேர அரசர்கள் பற்றி தெரிவிக்கிறது
110. பதிற்றுபத்து - பாடாண் திணையில் பாடப்பட்டுள்ளது

111. பதிற்றுபத்தில் அந்தாதித் தொடையால் அமைந்துள்ள பத்து - நான்காம் பத்து
112. பதிற்றுபத்தில் இரண்டாம் பத்து - இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனை, குமட்டூர்க்கண்ணனார் பாடியது
113. பதிற்றுபத்தில் மூன்றாம் பத்து - பால்யாணை செல்கெழுகுட்டுவனைப் பாலைக் கௌதமனார் பாடியது
114. பதிற்றுபத்தில் நான்காம் பத்து - களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலைக் காப்பியாற்றுக் காப்பியனார் பாடியது
115. பதிற்றுபத்தில் ஐந்தாம் பத்து - சேரன் செங்குட்டுவனைப் பற்றி பாணரால் பாடப்பட்டது
116. பதிற்றுபத்தில் ஆறாம் பத்து - ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைக் காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் பாடியது
117. பதிற்றுபத்தில் ஏழாம் பத்து -செல்வக்கடுங்கோ வாழியாதனைப் பற்றி கபிலரால் பாடப்பட்டது
118. பதிற்றுப்பத்தில் எட்டாம் பத்து - தகடூர் எறித்த பெருஞ்சேரல் இரும்பொறையை, அரிசில்கிழார் பாடியது
119. பதிற்றுப்பத்தில் ஒன்பதாம் பத்து - இளஞ்சேரல் இரும்பொறையை பெருங்குன்றூர் கிழார் பாடியது
120. புறநானூறு பாடிய புலவர்கள் - 165 பேர்
121. புறநானூற்றில் அமைந்துள்ள மொத்தப்பாடல்கள் - 400
122. புறநானூற்றின் அடிவரையறை - 4 -40
123. புறநானூற்றுக்கு கடவுள் வாழ்த்துப் பாடியவர் - பாரதம் பாடிய பெருந்தேவனார்
124. புறநானூற்றில் பாடப்படும் கடவுள் - சிவன்
125. பரிபாடல் பாடிய புலவர்கள் - 13 பேர்
126. பரிபாடலில் கிடைத்துள்ள பாடல்கள் - 22
127. பரிபாடலின் அடிவரையறை - 25 -400
128. பரிபாடலில் திருமால், முருகன், வையை பற்றி பாடல்கள் - முறையே 6,8,8
129. நற்றிணையை முதன் முதலில் உரை எழுதிப் பதிப்பிதித்தவர் - பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர்
130. பெண்களின் கூந்தலுக்கு நறுமணம் உண்டு எனக் கூறும் எட்டுத்தொகை நூல் - குறுந்தொகை
131. எட்டுத்தொகை நூல்களிள் அடி அளவால் சிறிய நூல் - ஐங்குநுறூறு
132. கலித்தொகை - தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என்னும் அமைப்பினைக் கொண்டது
133. கலித்தொகையை முதன் முதலில் பதிப்பித்து வெளியிட்டவர் - சி.வை. தாமோதரம்பிள்ளை
134. சிறுகதை அமைப்பிலும், ஓரங்க நாடகப்பாங்கிலும் அமைந்துள்ள எட்டுத்தொகை நூல் - கலித்தொகை
135. 'ஏறுதழுவல்" என்னும் வீரவிளையாட்டுப்பற்றிக் கூறும் நூல் - கலித்தொகை - முல்லைக்கலி
136. அகநானூற்றை முதன் முதலில் பதிப்பித்து வெளியிட்டவர் - கம்பர் விலாசம் வே. இராசகோபால் ஐயங்கார்
137. குடவேலைத் தேர்தல் முறை பற்றிக் குறிப்பிடும் எட்டுத்தொகை நூல் - அகநானூறு
138. சிறுகுழந்தைகளுக்கு ஐம்படைத்தாலி அணிதல் பற்றிக் குறிப்பிடும் நூல் - அகநானூறு
139. பதிற்றுபத்து முதன் முதலில் - 1904ல் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயரால் பதிப்பித்து வெளியிடப்பட்டது
140. பலவகைப்பாக்களும், பலவாய அடிகளும் பரிந்துவரும்எட்டுத்தொகை நூல் - பரிபாடல்
141. பரிபாடலின் மறுபெயர் - இசைப்பாட்டு
142. புறநானூற்றின் வேறுபெயர்கள் - புறம், புறப்பாட்டு
143. சங்கப்பாடல்கள் என்று குறிப்பிடுவது - எட்டுத்தொகை, பத்துப்பாட்டு
144. பத்துப்பாட்டில் ஆற்றுபடை நூல்கள் - 1. திருமுருகாற்றுப்படை, 2. பொருநராற்றுப்படை,3. சிறுபாணாற்றுப்படை, 4. பெருபாணாற்றுப்படை, 5. கூத்தராற்றுப்படை(அ) மலைபடுகடாம்
145. பத்துப்பாட்டில் அகநூல்கள்- 1. முல்லைப்பாட்டு, 2. குறிஞ்சிப்பாட்டு, 3. பட்டினப்பாலை
146. பத்துப்பாட்டில் புறநூல்கள் - 1. மதுரைக்காஞ்சி, 2. நெடுநெல்வாடை

147. பத்துப்பாட்டில் அகமா, புறமா என்ற சிக்கலுக்குரிய நூல் - நெடுநெல்வாடை
148. திருமுருகாற்றுப்படையின் மறுபெயர் - புலவராற்றுப்படை
149. திருமுருகாற்றுப்படையின் ஆசிரியர் - நக்கீரர்
150. திருமுருகாற்றுப்படையின் பாட்டுடைத்தலைவன் - முருகன்
151. திருமுருகாற்றுப்படையில் உள்ள மொத்த அடிகள் - 317
152. முருகப்பெருமான் குடிகொண்டுள்ள ஆறு வீடுகள் - 1. திருப்பரங்குன்றம், 2. திருச்சீரலைவாய்,3. திருவாவினன்குடி, 4. திருவேரகம், 5. குன்றுதோராடல், 6. பழமுதிர்ச்சோழை
153. பொருநராற்றுப்படையின் ஆசிரியர் - முடுத்தாமக்கண்ணியார்
154. பொருநராற்றுப்படையின் பாட்டுடைத்தலைவன் - கரிகால்சோழன்
155. பொருநராற்றுப்படையில் உள்ள அடிகள் - 248
156. பண்டைத்தமிழன் பழக்க வழக்கத்தை அறிவுறுத்தும் பத்துப்பாட்டு நூல் - பொருநராற்றுப்படை
157. சிறுபாணாற்றுபடையின் ஆசிரியர் - இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார்
158. சிறுபாணாற்றுப்படையின் பாட்டுடைத்தலைவன் - ஓய்மாநாட்டு நல்லியக்கோடன்
159. சிறுபாணாற்றுப்படையில் உள்ள அடிகள் - 269
160. வறுமை நிலையைப் பற்றி குறிப்பிடும் பத்துப்பாட்டு நூல் - சிறுபாணாற்றுப்டை
161. பெரும்பாணாற்றுப்டையின் ஆசிரியர் - கடியலூர் உருத்திரங்கண்ணனார்
162. பெரும்பாணாற்றுப்படையின் பாட்டுடைத்தலைவன் - தொண்டைமான் இளந்திரையன்
163. பெரும்பாணற்றுப்படையின் மொத்த அடிகள் - 500
164. பெரும்பாணாற்றுப்படையின் மறுபெயர் - பாணாறு
165. கூத்தராற்றுப்படையின் மறுபெயர் - மலைபடுகடாம்
166. கூத்தராற்றுப்படையினை எழுதியவர் - இராணிமுட்டத்துப் பெருங்கௌசிகனார்
167. கூத்தராற்றுப்படையின் பாட்டுடைத்தலைவன் - நன்னன் சேய் நன்னன்
168. கூத்தராற்றுபர்படையில் உள்ள அடிகள் - 583
169. பண்டைத்தமிழர்களின் இசைக்கருவிகளைப் பற்றி குறிப்பிடும் பத்துப்பாட்டு நூல் - கூத்தராற்றுப்படை
170. முல்லைப்பாட்டின் மறுபெயர் - நெஞ்சாற்றுப்படை
171. முல்லைப்பாட்டின் ஆசிரியர் - நப்பூதனார்
172. முல்லைப்பாட்டில் உள்ள அடிகள் - 103
173. பத்துப்பாட்டில் அடி அளவால் சிறய நூல் - முல்லைப்பாட்டு
174. விரிச்சி என்பது - நற்சொல் கேட்டல்
175. குறிஞ்சிப்பாட்டின் ஆசிரியர் - கபிலர்
176. குறிஞ்சிப்பாட்டைக் கபிலர் பாடிய காரணம் - ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவிப்பதற்காக
177. குறிஞ்சிப்பாட்டில் உள்ள அடிகள் - 261
178. குறிஞ்சிப்பாட்டு எந்த துறையில் அமைந்துள்ளது - அறத்தோடு நிற்றல்
179. 99 வகையான மலர்களைக் குறிப்பிடும் பத்துப்பாட்டு நூல் - குறிஞ்சிப்பாட்டு
180. பட்டினப்பாலையின் ஆசிரியர் - கடியலூர் உருத்திரங்கண்ணனார்
181. பட்டினப்பாலையின் பாட்டுடைத்தலைவன் - கரிகால்சோழன்
182. பட்டினப்பாலையின் பாடல் அடிகள் - 301
183. பட்டினப்பாலையின் மறுபெயர் - பாலைப்பாட்டு
184. மதுரைக்காஞ்சியின் ஆசிரியர் - மாங்குடி மருதனார்
185. மதுரைக்காஞ்சியின் பாட்டுடைத்தலைவன் - தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்
186. மதுரைக்காஞ்சியின் பாட்டு அடிகள் - 782
187. பத்துப்பாட்டு நூல்களுள் அளவால் பெயரிது - மதுரைக்காஞ்சி
188. மதுரைக்காஞ்சிக்கு வழங்கப்படும் மறுபெயர் - கூடற்றமிழ்

189. காஞ்சிப்பாட்டு என அழைக்கப்படும் நூல் - மதுரைக்காஞ்சி
190. பத்துப்பாட்டில் உலக நிலையாமையைப் பற்றிக் குறிப்பிடும் நூல் - மதுரைக்காஞ்சி
191. நெடுநெல்வாடையின் ஆசிரியர் - நக்கீரர்
192. நெடுநெல்வாடையின் பாட்டுடைத் தலைவன் - தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்
193. நெடுநெல்வாடையின் பாடல் அடிகள் - 188
194. நெடுநெல்வாடையில் அகமா, புறமா என்ற சிக்கலுக்குரிய பாடல் அடி - வேம்புதலையாத்த நோன்காழ் எ‡கம்
195. பத்துப்பாட்டில் இரண்டு பாடல்களைப் பாடியவர்கள் - நக்கீரர், கடியலூர் உருத்திரங்கண்ணனார்
196. நக்கீரர் பாடிய பத்துப்பாட்டு நூல்கள் - திருமுருகாற்றுப்படை, நெடுநெல்வாடை
197. கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடிய பத்துப்பாட்டு நூல்கள் - பெரும்பாணாற்றுப்படை, பட்டினப்பாலை
198. குளிரால் நடுங்கிய மயிலுக்குக்கலிங்கம் (ஆடை) வழங்கியவன் - பேகன் (வையாவிக்கோப்பெரும்பேகன்)
199. படர முடியாமல் துன்புற்ற முல்லைக்கொடிக்குத் தான் ஏறிவந்த தேரை நல்கியவன் - பாரி
200. இரவலர்க்குக் குதிரைகளைக் கொடுத்து அன்பு ஒழுகப்பேசி அனுப்பி வைத்தவன் - காரி
201. நாகப்பாம்பு தனக்களித்த கலிங்கத்தை ஆலமர்ச்செல்வனாகிய சிவபெருமானுக்கு வழங்கியவன் - ஆய் அண்டிரன்
202. உண்டாரை நீண்ட நாள்கள் வாழவைக்கக் கூடிய நெல்லிக்கனியை ஔவைக்கு ஈந்த பெருமைக்குரியவன் - அதியமான் நெடுமானஞ்சி
203. இரவலர்க்குச் சமைத்து உண்பதற்குத் தேவையான பாத்திரபண்டங்களைக் கொடுத்தவன் - நனிமலை நாடன் நள்ளி
204. இரவலர்க்குத் தனக்குரிய நாட்டிலுள்ள பல ஊர்களை வழங்கியவன் - வல்வில் ஓரி
205. கடையேழு வள்ளல்களின் கொடை முழுவதையும் தனி ஒருவராக நின்று செய்த பெருமைக்குரியவன் - ஓய்மாநாட்டு நல்லியக்கோடன்
206. சங்கப் பாடல்களின் மிக அதிகமான எண்ணிக்கையில் பாடல் பாடிய புலவர் - கபிலர்
207. சங்க காலத்தில் இருந்த பெண்பாற்புலவர்கள் - 30க்கும் மேல்
208. பதினேன் மேற்கணக்கு நூல்கள் - எட்டுத்தொகை, பத்துப்பாட்டு

**<u>சங்கம் மருவிய காலம்</u>**

209. சங்கம் மருவிய காலம் - கி.பி. 3ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதி முதல் கி.பி. 7ம் நூற்றாண்டின் தொடக்கம் வரை
210. சங்கம் மருவிய காலத்தை - நீதி நூற் காலம் என அழைப்பர்
211. களப்பிரர்களின் ஆட்சிமொழி - பாலி
212. களப்பிரர்களின் ஆட்சியில் ஏற்றம் பெற்ற பாவகை - வெண்பா
213. காப்பியங்கள் - சங்கம் மருவிய காலத்தில் தோன்றின
214. மதுரையில் தமிழ்ச்சங்கத்தை நிறுவியவர் -வஜ்ஜிரநந்தி என்னும் சமண முனிவர்
215. திருமந்திரத்தின் ஆசிரியர் - திருமூலர்
216. காரைக்கால் அம்மையார் எழுதிய நூல்கள் - அற்புதத்திருவந்தாதி, திருவரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்
217. பதினென் கீழ்கணக்கு நூல்களில் அறநூல்கள் - 11
218. பதினென் கீழ்கணக்கு நூல்களில் - அகநூல்கள் -6
219. பதினென் கீழ்கணக்கு நூல்களில் புறநூல்கள் - 1
220. பதினென் கீழ்கணக்கு நூல்களில் முதலாவதாக இடம் பெறும் நூல் - நாலடியார்
221. பதினென் கீழ்கணக்கு நூல்களில் 11வதாக இடம் பெறும் நூல் - திருக்குறள்
222. நான்மணி என்பது - நான்மணிக்கடிகை

223. முப்பால் என்பது - அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் ஆகிய மூன்று பால்களை உடைய திருக்குறள்
224. கடுகம் என்பது - திரிகடுகம்
225. கோவை என்பது - ஆசாரக்கோவை
226. காஞ்சி என்பது - மதுரைக்காஞ்சி
227. பதினென் கீழ்கணக்கு நூல்களில் மருந்தின் பெயர்களைக் கொண்ட நூல்கள் - திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏழாதி
228. பதினென் கீழ்கணக்கு நூல்களில் இடம்பெற்றுள்ள நீதிநூல்களில் சிறந்து விளங்குபவை - திருக்குறள், நாலடியார்
229. திருக்குறளின் ஆசிரியர் - திருவள்ளுவர்
230. திருக்குறளின் பிரிவுகள் - அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால்
231. திருக்குறளில் உள்ள அதிகாரங்கள் - 133
232. திருக்குறளில் உள்ள பாடல்கள் - 1330
233. அறத்துப்பாலில் உள்ள அதிகாரங்கள் - 38
234. பொருட்பாலில் உள்ள அதிகாரங்கள் - 70
235. காமத்துப்பாலில் உள்ள அதிகாரங்கள் - 25
236. திருக்குறளின் பெருமையை விளக்குவதற்காகத் தோன்றிய நூல் - திருவள்ளுவமாலை
237. திருக்குறளின் வேறுபெயர்கள் - உலகப்பொதுமறை, முப்பானூல், உத்தரவேதம், தெய்வநூல், பொய்யாமொழி, தமிழ்மறை, வாயுறை வாழ்த்து
238. திருவள்ளுவரின் வேறுபெயர்கள் - நாயனார், தேவர், முதற்பாவலர், தெய்வப்புலவர், நான்முகனார், மாதானுபாங்கி, செந்நாப்போதகர், பெருநாவலர்
239. நாலடியாரை இயற்றியவர் - சமணமுனிவர்கள்
240. நாலடியாரில் உள்ள பாடல்கள் - 400
241. நாலடியாரின் வேறுபெயர்கள் - நாலடிநானூறு, வேளாண் வேதம்
242. நாலடியாரில் உள்ள பிரிவுகள் - அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால்
243. நாலடியார் அறத்துப்பாலில் உள்ள அதிகாரங்கள் - 13
244. நாலடியார் பொருட்பாலில் உள்ள அதிகாரங்கள் - 24
245. நாலடியார் காமத்துப்பாலில் உள்ள அதிகாரங்கள் - 3
246. நாலடியாரை மூன்று பால்களாகப் பகுத்து உரைத்தவர் - பதுமனார்
247. திருக்குறளுக்கு உரை எழுதியவர்கள் - பதின்மர்
248. திருக்குறள் உரைகளில் சிறந்த உரையாக கருதப்படுவது - பரிமேலழகர் உரை
249. நான்மணிக்கடிகையின் ஆசிரியர் - விளம்பிநாகனார்
250. கடிகை என்பதன் பொருள் - துண்டம் (துண்டு)
251. நான்மணிக்கடிகையின் காலம் - கி.பி. 4ம் நூற்றாண்டு
252. நான்மணிக்கடிகையில் உள்ள வெண்பாக்கள் - 104
253. இன்னா நாற்பதின் ஆசிரியர் - கபிலர்
254. இன்னாநாற்பதின் காலம் - கி.பி. 4ம் நூற்றாண்டு
255. இன்னா நாற்பது - இன்னிசை வெண்பா யாப்பில் அமைந்துள்ளது
256. இன்னா நாற்பதில் குறிப்பிட்டுள்ள கடவுள்கள் - சிவன், பலராமன், மாயோன், முருகன்
257. இன்னா நாற்பதில் இடம் பெற்றுள்ள இன்னாத கருத்துகள் - 160 கருத்துக்கள்
258. இனியவை நாற்பதின் ஆசிரியர் - பூதஞ்சேத்தனார்
259. இனியவை நாற்பதின் காலம் - கி.பி. 5ம் நூற்றாண்டு
260. இனியவை நாற்பதில் மூன்று இனிய பொருட்களைத் தரும் பாடல்கள் - 36
261. இனியவை நாற்பதில் நான்கு இனிய பொருட்களைத் தரும் பாடல்கள் - 4
262. திரிகடுகத்தை இயற்றியவர் - நல்லாதனார்
263. திரிகடுகம் தோன்றிய காலம் - கி.பி. 5ம் நூற்றாண்டு

264. திரிகடுகத்தில் உள்ள பாடல்கள் - 100
265. திரி என்பதன் பொருள் - மூன்று
266. கடுகம் என்பதன் பொருள் - காரம்
267. திரிகடுகத்தில் இடம் பெற்றுள்ள மருந்துப்பொருட்கள் - சுக்கு, மிளகு, திப்பிலி
268. ஆசாரக்கோவையின் ஆசிரியர் - பெருவாயின் முள்ளியார்
269. ஆசாரக்கோவையின் காலம் - கி.பி. 5ம் நூற்றாண்டு
270. ஆசாரக்கோவையில் உள்ள பாடல்கள் - 100
271. ஆசாரம் என்பது - ஒழுக்கம்
272. கோவை என்பது - அடுக்கிக்கூறல்
273. பழமொழி நானூறின் ஆசிரியர் - முன்றுரை அரையனார்
274. பழமொழி நானூறு தோன்றிய காலம் - கி.பி. 5ம் நூற்றாண்டு
275. பழமொழி நானூறில் அமைந்துள்ள பாடல்கள் - 400
276. வரலாற்றுச் செய்திகளை மிகுதியாகக் கொண்டுள்ள பதினென் கீழ்க்கணக்கு நூல் - பழமொழி நானூறு
277. சிறுபஞ்சமூலத்தின் ஆசிரியர் - காரியாசன்
278. சிறுபஞ்சமூலத்தின் காலம் - கி.பி. 5ம் நூற்றாண்டு
279. சிறுபஞ்சமூலத்தில் அமைந்துள்ள பாடல்கள் - 100
280. மூலம் என்பது - வேர்
281. பஞ்சம் என்பது - ஐந்து
282. சிறுபஞ்சமூலத்தில் இடம் பெற்றுள்ள ஐந்துவேர்கள் - கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, சிறுநெருஞ்சி
283. முதுமொழிகாஞ்சியின் ஆசிரியர் - மதுரைக் கூடலூர்கிழார்
284. முதுமொழிகாஞ்சியின் காலம் - கி.பி. 5ம் நூற்றாண்டு
285. முதுமொழிகாஞ்சியில் உள்ள பாடல்கள் - 100
286. முதுமொழிகாஞ்சியில் உள்ள அதிகாரங்கள் - 10
287. முதுமொழிகாஞ்சியில் உள்ள பாடல்கள் - குறட்டாழிசை வெண்பாவால் அமைந்துள்ளது
288. நிலையாமையை உணர்த்தும் பதினென் கீழ்கணக்கு நூல் - முதுமொழிகாஞ்சி
289. ஏலாதியின் ஆசிரியர் - கணிமேதாவியர்
290. ஏலாதியில் உள்ள பாடல்கள் - 80
291. ஏலாதி தோன்றிய காலம் - கி.பி. 5ம் நூற்றாண்டு
292. ஏலாதியில் குறிப்பிட்டுள்ள மருந்துப்பொருட்கள் - ஏலம், இலவங்கம், சிறுநவாற்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி
293. ஐந்திணை ஐம்பதின் ஆசிரியர் - மாறன் பொறையனார்
294. ஐந்திணை ஐம்பதில் உள்ள பாடல்கள் - 50
295. ஐந்திணை ஐம்பதின் காலம் - கி.பி. 4ம் நூற்றாண்டு
296. ஐந்திணை எழுபதின் ஆசிரியர் - மூவாதியார்
297. ஐந்திணை எழுபதில் உள்ள பாடல்கள் - 70
298. ஐந்திணை எழுபதின் காலம் - கி.பி. 5ம் நூற்றாண்டு
299. திணைமொழி ஐம்பது பாடியவர் - கண்ணஞ்சேந்தனார்
300. திணைமொழி ஐம்பது தோன்றிய காலம் - கி.பி. 4ம் நூற்றாண்டு
301. திணைமாலை நூற்றைம்பதின் ஆசிரியர் - கணிமேதாவியார்
302. திணைமாலை நூற்றைம்பதில் உள்ள பாடல்கள் - 150
303. திணைமாலை நூற்றைம்பதின் காலம் - கி.பி. 5ம் நூற்றாண்டு
304. கார் நாற்பதின் ஆசிரியர் - மதுரைக் கண்ணங்கூத்தனார்
305. மதுரைக் கண்ணங்கூத்தனாரின் இயற்பெயர் - கூத்தன்
306. கார்நாற்பதின் காலம் - கி.பி. 4ம் நூற்றாண்டு

307. கார் நாற்பதில் இடம் பெற்றுள்ள பாடல்கள் - 40
308. கைந்நிலையின் ஆசிரியர் - புல்லங்காடனார்
309. கைந்நிலையின் வேறுபெயர் - ஐந்திணை அறுபது
310. கைந்நிலையின்காலம் - கி.பி. 5ம் நூற்றாண்டு
311. கைந்நிலையில் அமைந்துள்ள பாடல்கள் - 60
312. இன்னிலை ஒரு - நீதிநூல்
313. இன்னிலை பாடிய ஆசிரியர் - பொய்கையார்
314. இன்னிலையில் உள்ள பாடல்கள் - 45
315. இன்னிலையைத் தொகுத்தவர் - மதுரை ஆசிரியர் பூதனார்
316. இன்னிலைக்கு கடவுள் வாழ்த்துப்பாடியவர் - பாரதம் பாடிய பெருந்தேவனார்
317. இன்னிலையில் அமைந்துள்ள பிரிவுகள் - அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால், வீட்டிலக்கப்பால்
318. களவழி நாற்பதின் ஆசிரியர் - பொய்கையார்
319. களவழி நாற்பதில் உள்ள வெண்பாக்கள் - 40
320. யானைப்போர் பற்றிக் குறப்பிடும் பதினென் கீழ்கணக்கு நூல் - களவழி நாற்பது
321. களவழி நாற்பதில் அமைந்துள்ள வனப்பு - அம்மை
322. களவழி நாற்பது பாடல் ஒவ்வொன்றும் - அட்டகளத்து என்ற சொல்லைக் கொண்டு முடிவடைகிறது
323. திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் - டாக்டர். ஜி.யு. போப்
324. திருக்குறள் மொழி பெயர்க்கப்பட்டுள்ள அயல் மொழிகள் - ஆங்கிலம், இலத்தீன், பிரெஞ்சு, ஜெர்மனி
325. திருக்குறளை இலத்தீன் மொழியில் மொழி பெயர்த்தவர் - வீரமாமுனிவர்
326. கீழ்க்கணக்கு நூல்களுள் புறநூல் - களவழி நாற்பது
327. சேரமான் கணக்கால் இரும்பொறை அரசனைச் சிறைமீட்க களவழி நாற்பது பாடப்பட்டது
328. சிலப்பதிகாரத்தின் காலம் - கி.பி. 2ம் நூற்றாண்டு
329. சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் - இளங்கோவடிகள்
330. தமிழில் தோன்றிய முதல் காப்பியம் - சிலப்பதிகாரம்
331. சிலப்பதிகாரத்தில் உள்ள காண்டங்கள் - புகார்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம்
332. காண்டம் என்பதன் பொருள் - பெரும்பிரிவு
333. புகார்க்காண்டத்தின் உள்ள காதைகள் - 10
334. மதுரைக்காண்டத்தில் உள்ள காதைகள் - 13
335. வஞ்சிக்காண்டத்தில் உள்ள காதைகள் - 7
336. சிலப்பதிகாரத்தில் உள்ள மொத்த காதைகள் - 30
337. சிலப்பதிகாரத்தின் வேறுபெயர்கள் - மூவேந்தர் காப்பியம், வரலாற்றுக்காப்பியம், தேசிய காப்பியம், குடிமக்கள் காப்பியம், புரட்சிக்காப்பியம், முத்தமிழ்க்காப்பியம், ஒற்றுமைக்காப்பியம்,உரையிடையிட்ட பாட்டுடைச்செய்யுள்
338. சிலப்பதிகாரத்தில் திருப்புமுனையாக அமையும் காதை - கானல்வரி
339. சிலப்பதிகாரம் பாடப்பட்டதன் நோக்கம் - அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்,உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தல், ஊழ்வினை உருத்து வந்தூட்டும்
340. கோவலனின் தந்தை பெயர் - மாசாத்துவான்
341. கண்ணகியின் தந்தை - மாநாய்க்கன்
342. மாதவியின் தாயின் பெயர் - சித்திராபதி
343. கண்ணிகியின் தோழி - தேவந்தி
344. மாதவியின் தோழி - வயந்தமாலை
345. சிலப்பதிகாரம் - சமணசமய காப்பியம்

346. சிலப்பதிகாரத்தில் கோவலனைக் கொலை செய்த பாண்டிய மன்னன் - பாண்டியன் நெடுஞ்செழியன்
347. பாண்டியனின் மனைவி - கோப்பெருந்தேவி
348. சிலப்பதிகாரத்தில் உள்ள சமணத்துறவி - கவுந்தியடிகள்
349. கண்ணகிக்கு சிலையெடுத்த சேரமன்னன் - சேரன் செங்குட்டுவன்
350. சேரன் செங்குட்டுவனின் மனைவி - வேண்மாள்
351. சேரன் செங்குட்டுவன் வென்ற ஆரிய அரசர்கள் - கனகர், விசயர்
352. கண்ணகிக்கு சிலை எழுப்பியபோது வந்து சிறப்பித்த இலங்கை அரசன் - கயவாகு
353. சிலப்பதிகாரத்தில் உள்ள மூன்று பொய்கைகள்- புண்ணி சரவணம், பவகாரணி, இட்டசித்தி
354. மாதவி கோவலனுக்கு எழுதிய இரண்டாவது கடிதத்தை கொண்டு சென்றவன் - கோசிகன்(கௌசிகன்)
355. மாதரியின் குலம் - ஆயர்குலம்
356. மாதரியின் மகள் - ஐயை
357. இந்திரவிழா - 28 நாட்கள் நடைபெறும்
358. சிலப்பதிகாரக் கதையை இளங்கோடிவடிகளுக்கு உரைத்தவர் - மதுரைக் கூலவாணிகன் சீத்தலை சாத்தனார்
359. இரட்டைக்காப்பியங்கள் - சிலப்பதிகாரம், மணிமேகலை
360. சிலப்பதிகாரம் - ஆசிரியப்பாவால் அமைந்துள்ளது
361. இளங்கோவடிகளின் தமையன் - சேரன் செங்குட்டுவன்
362. இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை - மதுரைக் கூலவாணிகன் சீத்தலைசாத்தனார் முன்னிலையில் அரங்கேற்றினார்
363. மணிமேகலை - பௌத்த சமயக் காப்பியம்
364. மணிமேகலையின் ஆசிரியர் - மதுரைக் கூலவாணிகன் சீத்தலைசாத்தனார்
365. மணிமேகலையில் உள்ள காதைகள் - 30
366. மணிமேகலையை மதுரைக் கூலவாணிகன் சீத்தலைசாத்தனார் - இளங்கோவடிகள் முன்னிலையில் அரங்கேற்றினார்
367. மணிமேகலை - அகவற்பாவால் அமைந்துள்ளது
368. மணிமேகலையின் வேறுபெயர் - புரட்சிக்காப்பியம் , மணிமேகலைத்துறவு, அறக்காப்பியம், சமயக்காப்பியம், சீர்த்திருத்தக்காப்பியம், துறவுக்காப்பியம்
369. தமிழில் கிளைக்கதைகள் அதிகம் கொண்ட நூல் - மணிமேகலை
370. தமிழில் தோன்றிய முதல் சமயக்காப்பியம் - மணிமேகலை
371. தமிழில் கதைத்தலைவியின் பெயரால் அமைந்த முதற்காப்பியம் - மணிமேகலை
372. மணிமேகலையில் உள்ள பாடலடிகள் - 4286
373. முற்பிறப்பில் மணிமேகலையின் பெயர் - இலக்குமி
374. மணிமேகலையின் முற்பிறப்பு கணவன் பெயர் - இராகுலன்
375. மணிமேகலையின் பழம்பிறப்பை உணர்த்தியது - புத்தபீடிகை
376. மணிமேகலையில் வரும் ஐவகை வனங்கள் - இலவந்திகை வனம், உய்யாவனம், சம்பாவதிவனம், கவோவனம், உவவனம்
377. மணிமேகலை அமுதசுரபியை - மணிபல்லவத் தீவில் உள்ள கோமுகி என்னும் பொய்கையிலிருந்து ஆரம்பித்தாள்
378. அமுதசுரபியில் முதன் முதலாக வாழ்த்துக்கூறி உணவிவட்டவள் - ஆதிரை
379. ஆபுத்திரனின் தாயின் பெயர் - சாலி என்னும் அந்தணப்பெண்
380. மணிமேகலையைச் சிறையிலிட்டுத் துன்புறுத்தியவள் - இராசமாதேவி
381. மணிமேகலை - காயசண்டிகையின் வடிவத்தை மேற்கொண்டாள்
382. இளவரசன் உதயகுமாரனை வெட்டிக்கொன்றவன் - காஞ்சனன்
383. மகனை இழந்த இராசமாதேவிக்கு அறிவுரை கூறி ஆற்றியவள் - மணிமேகலை

384. மணிமேகலை முதன் முதலில் காயசண்டிகையின் பசியை நீக்கினாள்
385. மணிமேகலையில் வரும் துறவி - அறவண அடிகள்
386. உலக துன்பத்திற்குக் காரணம் - காமம், வெகுளி, மயக்கம் என்று அறவண அடிகள் மணிமேகலைக்கு அறிவுறுத்தினார்
387. உதயகுமாரானின் முற்பிறப்பு பெயர் - இராகுலன்
388. மணிமேகலையின் தோழி - சுதமதி
389. மணிமேகலையை மணிபல்லவத்தீவிற்கு தூக்கிக் கொண்டு சென்றது - மணிமேகலா தெய்வம்
390. திருமூலர் வாழ்ந்த ஆண்டுகள் - 3000 ஆண்டுகள்
391. பத்தாம் திருமுறை பாடல்கள் - 3000
392. திருமந்திரத்தில் அடங்கியுள்ள அதிகாரங்கள் - 232
393. திருமந்திரத்தில் அடங்கியுள்ள தந்திரங்கள் - 9
394. பதினோராம் திருமுறை - காரைக்கால் அம்மையாரின் பாடல்கள்
395. காரைக்கால் அம்மையார் இயற்றிய நூல் - 4
396. காரைக்கால் அம்மையாரை 'அம்மையே" என்று அழைத்தவர் - சிவபெருமான்
397. காரைக்கால் அம்மையாரின் இயற்பெயர் - புனிதவதியார்
398. காரைக்கால் அம்மையாரின் கணவர் - பாமதத்தன்
399. திருவாலங்காட்டில் காரைக்கால் அம்மையார் கண்டுகளித்தது - சிவனின் திருநடனம்
400. காரைக்கால் அம்மையாரின் வரலாற்றைப் பாடியவர் - சேக்கிழார்
401. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் என்னும் பெயரில் உள்ள நூல்கள் - இரண்டு
402. காரைக்கால் அம்மையார் எழுதிய மொத்தப்பாடல்கள் - 143
403. பக்தி இலக்கியத்தை முதன் முதலில் தொடங்கி வைத்தவர் - காரைக்கால் அம்மையார்
404. திருமந்திரத்தின் வேறுபெயர்கள் - திருமந்திரமாலை, தமிழ் மூவாயிரம்
405. திருமூலருக்கு - திருவாடுதுறையில் கோயில் உள்ளது
406. சித்தாந்தம் என்ற சொல் முதன் முதலில் - திருமந்திரத்தில் வந்துள்ளது

காஞ்சி கல்வி

TNPSC –PG TRB

WE SELL WORDS FILE MATERIALS

TO ALL COACHING CENTER

TO ALL BOOK PUBLICATION